22nd July 1964]

கனம் திரு. வெ. ராமைய்யா : இவ்வளவு சுலபமாக அந்த வேலை நடக்குமானால் கஷ்டமே இல்லை. தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுமல்ல; தமிழ்நாட்டுக்கே அது ஒரு பெரிய பிரச்னை. நூற்றுக்கணக்கான வருஷங்கள் அந்தப் பிரச்னை முறையாகக் கவனிக்கப்படாமல் இருந்த காரணத்தால் பெரிய சேதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்பொழுது அரசாங்கம் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்துகிறது. நேற்றையத்தினம்கூட, அமெரிக்காவிலிருந்து வந்திருந்த நிபுணர்கள் அரசாங்கத்தோடு பேசிவிட்டு, ஐந்து தினங்கள் அந்த ஜில்லாவில் சுற்றிப் பார்த்துவர போயிருக்கிறார்கள். ஒரு வாரத்திற்குப் பிறகு அவர்கள் திரும்புவார்கள். இது மிகப் பெரிய பிரச்னையாக இருப்பதால், எந்த வேலையை எடுத்தாலும் மிக நுணுக்கமாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதற்குவேண்டிய இன்வெஸ்டிகேஷன் எல்லாம் நம்முடைய ராஜ்ய நிபுணர்கள் ஆராய்வு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதோடு வெளிநாட்டவர்களுடைய ஆலோசனையையும் கேட்டு ஒரு பெரிய திட்டமாக உருவாக்கவேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படுவது ஒருபுறமிருக்க, அதற்கு முன்னால் அவசரமாகக் கவனிக்கப்படவேண்டியதும் இருக்கிறது. ஆறுகள், கால்வாய்களினுடைய கரைகள் உயரம் போதாமல் இருக்கின்றன. மழை பெய்தவுடன் உடைப்பு ஏற்பட்டுவிடுகிறது. கரைகளை உயர்த்திக் கட்ட அரசாங்கம் விசேஷமான அக்கறை எடுத்துக்கொள்ளுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : உடனுக்குடன் செய்ய வேண்டிய மராமத்து வேலைகள், இந்தத் திட்டங்கள் உருவாகி நடைபெறும் வரைக்கும் காத்திருக்காமல், எதை எதை எவ்வப்போது செய்ய வேண்டுமோ அதை மராமத்து இலாகா செய்யும் என்று சொல்லலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய இன்ஜினியர்கள் இந்த வடிகால் திட்டத்தைப்பற்றி விரிவான ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தோம். அதற்குமேல் செயல் திட்டம் உருவாக்கும் விஷயத்தில் அவர்களைச் சர்க்கார் விரைவு படுத்துமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : முதலில் அவர்கள் பரிசீலனை செய்து திட்டம் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பெரும் பிரச்னையை அணுகும்போது, ஆரம்பத்தில் இருந்த கஷ்டங்களை விட இப்பொழுது அதில் இருக்கும் கஷ்டங்கள் இன்னும் அதிகமாகத் தெரியும் காரணத்தால், இன்னும் திருப்தி தரக்கூடிய முறையில் அமையவேண்டும் என்பதற்காக எல்லா முயற்சிகளும் நாம் எடுத்துக்கொள்கிறோம்.

** 639 கேள்வி.—திரு. மா. இராசாங்கம் : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெரியகுளம் தாலுகா, எரசக்கநாயக்கனூர் கிராமத்தில் வெள்ளத்தால் வேளாண்மைக்கு சேதம் ஏற்பட்டுள்ளது எவ்வளவு ?

(இ) அரசாங்கம் எடுத்த நிவாரண நடவடிக்கைகள் என்ன ?

(உ) இனிமேல் இப்படி சேதம் ஏற்படாமல் இருக்க எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) The extent of standing crops damaged is 5 acres and the value of the damage is Rs. 2,000.

(b) No relief was granted to the ryots.

(c) An estimate for Rs. 35,000 is under preparation for strengthening the entire length of the bund of the supply channel to Naickenkulam tank of Erasakkanayakkanur village and for its stone revetment.

திரு. மா. இராசாங்கம் : சர்க்கார் எடுத்திருக்கும் நடவடிக்கையின்படி, வெள்ளாமைக் காடுகளில் ஏற்படுகிற வெள்ளத்தைத் தடுப்பதற்குத் தான் வழி இருக்கிறதே தவிர, இந்தப் புதிதாக எடுத்த நடவடிக்கை அந்த ஊரில் இருக்கிற பொது மக்களுக்கு ஆபத்து விளைவித்திருக்கிறது. ஆகவே, அதை மறு பரிசீலனை செய்து, மாற்று நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது ஒரு எஸ்டிமேட் போட்டுப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். இது கனம் அங்கத்தினருடைய முடிவின்படி போதாது என்று நினைத்தால், அந்த எஸ்டிமேட்டை நிறுத்திவிட்டுப் பூர்வாங்கமாக மறு பரிசீலனை செய்வதற்குக் கனம் உறுப்பினர் ஆலோசனை சொல்லி எழுதினால், அதை அரசாங்கம் கவனிக்கும்.

* 640 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1963-ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த மழையால், கிராமங்களில் குறுகிய காலச்சாகுபடி செய்துள்ள நில விஸ்தீரணம் எவ்வளவு ?

(இ) அந்த நிலங்களுக்கு தண்ணீர் விடுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) 302.80 ஏக்கர்.

(இ) குறுவை சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்கு 1964 பிப்ரவரி 29-ந் தேதி வரையில் பாசனத்திற்காக நீர் விடப்பட்டது. தண்ணீர் விடுவது, கல்லணை கால்வாய் விஷயத்தில் 15—3—1964 வரையிலும், காவிரி, வெண்ணாறு கிளைகள் விஷயமாய் 31—3—1964 வரையிலும் நீடிக்கப்பட்டது. அதன் பிறகு, கோடைப் பாசனத்திற்கு இயற்கையாக ஓடும் நீரைப் பயன்படுத்தவும் அனுமதியளிக்கப்பட்டது. ஆறு அல்லது வாய்க்காலில் தண்ணீர் ஓட்டம் கணிசமாக இல்லாதபோது, ஆற்றிலும் வாய்க்காலிலும் மேல்மட்ட தண்ணீரை பம்ப்பு செய்துகொள்ளவும், நீர் மட்டம் குறைவாக இருக்கையில், ஆறு, வாய்க்காலில் குரம்பு அமைக்கவும் விவசாயிகள் அனுமதிக்கப்பட்டனர்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.